


**22. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நீட் வினாத்தாள் கசிவு தொடர்பான விவாதத்திற்கு மத்திய அரசு தயாராக இருப்பதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

2. நீட் தேர்வு அறவே அகற்றப்படுவதன் அவசியத்தை முதலமைச்சர் திரு. விஜய் வலியுறுத்தியுள்ளார்.

3. கடலூர், தென்காசி, திருப்பத்தூர், ஈரோடு, உள்ளிட்ட 11 மாவட்ட அரசு மருத்துவமனைகளில், தீவிர கண்காணிப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

4. காவிரி நீர் மேலாண்மை ஆணையக்கூட்டம் புதுதில்லியில் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

5. சீன ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு ஆயுஷ்ஷெட்டி முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

நீட் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சியினரின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை இன்றும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள முயன்றபோது எதிர்கட்சியினர், மாணாக்கரின் போராட்டம் மற்றும் நீட் வினாத்தாள் கசிவு பிரச்சனைகளில் குரல் எழுப்பினர்.

அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற எதிர்கட்சியினர் ஒத்துழைக்க வேண்டும் என்று அவைத் தலைவரின் கோரிக்கைக்கு யாரும் செவிமடுக்காமல் அமளியில் ஈடுபட்டதாகல் அவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக மத்திய அரசு விவாதத்திற்கு தயாராக இருப்பதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு எடுத்துரைத்தார்.

அதேவேளையில் இந்த விவாதம் உரிய விதிகளை பின்பற்றியும், முறையான தயாரிப்புடனும் நடைபெறுவதன் அவசியத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பான கால அவகாசம் மற்றும் விவாதத்திற்கான விதிகளை அனைத்துக்கட்சிகளின் தலைவர்களிடம் அவர் கோரினார்.

இப்பிரச்சனையில் இளைஞர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அர்த்தமுள்ள ஆக்கப்பூர்வமான விவாதம் நடைபெற வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

காங்கிரஸ் காட்சியின் திரு. கே.சி. வேணு கோபாலும், சமாஜ்வாடி கட்சியின் அகிலேஷ் யாதவ்வும், மாணாக்கரின் போராட்ட விவகாரத்தை எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த திரு. ஓம்பிர்லா விவாதத்திற்கு அரசு தயாராக இருப்பதாகவும், ஒருங்கிணைந்து விவாதத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டுமென்றும் எடுத்துரைத்தார்.

இப்பிரச்சனையில் அமளி தொடரவே மக்களவை மீண்டும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

மாநிலங்களவை

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்தது.

அவை இன்று கூடியதும் சிக்கிம் புனல்மின் கட்டமைப்பு திட்ட சுரங்க விபத்தில் உயிரிழந்தோருக்கு அவைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து எதிர்கட்சித்தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே பேச அவைத்தலைவர் அனுமதி அளித்ததை அடுத்து, நீட் மற்றும் மாணாக்கர் போராட்டம் தொடர்பான விவகாரத்தை எழுப்பினார்.

அப்போது எதிர்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களிடையே கடும் வாக்குவாதமும், அமளியும்

நிலவியதையடுத்து மாநிலங்களவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பிற்பகல் வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

பானு ஸ்ரீ ஸ்வரா

மாணாக்கரின் எதிர்காலத்தை பாதுகாப்பதே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்று பி.ஜே.பி. தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பானு ஸ்ரீ ஸ்வராஜ், வளர்ச்சியடைந்த பாரத பாதையை வலுப்படுத்த இளைஞர்களை கொண்ட வளர்ச்சியே திரு. நரேந்திரமோடி தலைமையிலான பி.ஜே.பி. அரசின் தாரக மந்திரம் என்றும் குறிப்பிட்டார்.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவு தொடர்பாக 13 பேர் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாகவும், இவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என்றும் கூறினார்.

எதிர்கால தேர்வுகளை சிறப்பாக நடத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்றார்.

மாணாக்கர் போராட்ட விவகாரத்தில் பேச்சுவார்த்தைக்கு அரசு தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

நீட் தேர்வு அறவே அகற்றப்படுவதே மாணாக்கரின் போராட்டத்திற்கு உரிய தீர்வு என்று முதலமைச்சர் திரு. விஜய் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கல்வி மாநில பட்டியலுக்கு மாற்றப்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மக்களின் உணர்வுகளையும், மாணாக்கரின் உணர்வுகளையும் மத்திய அரசு மதிப்பதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல்காந்தி டெல்லியில் நேற்று கைது செய்யப்பட்டதற்கு அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்மோகன்

நீட் ஒழிப்புதான் த.வெ.க. அரசின் நிலைப்பாடு என மாநில பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பிரச்சனையில் மாணாக்கர் போராட்டம் நடத்துவது ஜனநாயக உரிமை என்றும், ஆனால் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் சாலைகளில் போராட்டம் நடத்தக்கூடாது என்றும் குறிப்பிட்டார்.

நீட் தேர்விற்கு எதிராக உரிய அனுமதி பெற்று மாணவர்கள் அறவழியில் போராடுவதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

இந்தியா சீனா இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பின் அவசியம் குறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தினிடையே சீன வெளியுறவு அமைச்சர் வாங்யீயை சந்தித்து பேசியஅவர், பரஸ்பரநலன், எல்லைப்பகுதியில் அமைதியை நிலைநாட்டுவது, நேரடி விமான சேவைகளை தொடங்குதல், விசா நடைமுறைகளில் மாற்றங்கள், எல்லை வர்த்தகம் உள்ளிட்டவற்றின் செயல்பாடுகள் குறித்து கலந்தாலோசித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

INS Malvan கப்பல்

உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட இந்திய கடற்படையின் INS Malvan நீர்மூழ்கி தடுப்பு போர்க்கப்பல் இந்திய கடற்படையில் இன்று இணைக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் கர்வார் கடற்படைத் தளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய விமானப்படை தளபதி ஏர் சீப் மார்ஷல் ஏ.பி. சிங் நாட்டின் சுயசார்பு பாதை பயணத்தின் எடுத்துக்காட்டாக I.N.S. மால்வான் திகழ்கிறது என்று தெரிவித்தார்.

கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்வதில் இப்போர்க் கப்பல் இன்றியமையா பணியாற்றும் என்று அவர் எடுத்துரைத்தார்.

கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் 80 சதவிகித உள்நாட்டு உபகரணங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களுடன் ஐ. என். எஸ். மால்வான் வடிவமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖

அருண்ராஜ்

கடலூர், தென்காசி, திருப்பத்தூர், ஈரோடு, மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி, தூத்துக்குடி, கோவை, தஞ்சை, திருவாரூர், விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் தீவிர மருத்துவ கண்காணிப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தலா 10 படுக்கை வசதியுடன், தனியார் வங்கி பங்களிப்புடன் இவை செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக எடுத்துரைத்தார்.

மாநிலத்தில் டெங்கு பரவலை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

பணியிட மாற்றம்

தமிழக காவல்துறையில் பணியிட மாற்றங்கள் செய்து மாநில அரசு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்படி சென்னை ஊர்க்காவல் படையின் துணை காவல்துறை இயக்குநராக, திருச்சி ஆயுதப்படை துணை தலைமை இயக்குநர் விஜயலட்சுமி பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சென்னை மேற்கு சரக லஞ்ச ஊழல் தடுப்பு காவல்துறை கண்காணிப்பாளராக, சென்னை C.I.D பிரிவு மத்திய மண்டல காவல்துறை கண்காணிப்பாளர் D. சண்முகபிரியா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆர். சிவபிரசாத், தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராகவும்,

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராகவும், நியமிக்கப்பட்டுள்ளனர்.

ராமேஸ்வரம் காவல்துறை துணை கண்காணிப்பாளர் P.R. மீரா, சென்னை கணினி மையத்தின் துணை கண்காணிப்பாளராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

காவிரி ஆணையக்கூட்டம்

காவிரி நீர் மேலாண்மை ஆணையக்கூட்டம் அதன் தலைவர் திரு. எஸ். கே. ஹல்தர் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

தமிழகத்திற்கு ஜுன், ஜூலை மாதங்களுக்கு கர்நாடகம் வழங்க வேண்டிய நிலுவை நீரை விடுவிக்க இக்கூட்டத்தில் வலியுறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

மக்கள் தொகை கணக்கெடுப்பு

தூத்துக்குடி மாவட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பில், சுய கணக்கெடுப்பு உதவி மையம் இன்று செயல்பாட்டிற்கு வந்தது.

இக்கணக்கெடுப்பு தொடர்பான பொதுமக்களின் சந்தேகங்களுக்கு தீர்வு காணும் வகையில் உதவிமையம் அமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

வேலூர் மாவட்டத்திலும் வருவாய் துறை சார்பில் இன்று நடைபெற்ற மக்கள் தொகை கணக்கெடுப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தில் திரளான கல்லூரி மாணாக்கரும், பொதுமக்களும் கலந்து கொண்டு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

திருவாரூர் - வாய்ஸ்

திருவாரூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இரண்டாவது நாளாக இது சார்ந்த ஆய்வுப்பணிகள் முழுவீச்சில் நடைபெறுவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

ராமநாதபுரம் அருள்மிகு கோதண்டராம சுவாமி திருக்கோவிலில் ஆனி பிரம்மோற்சவ விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

ஏராளமானோர் இதில் பங்கேற்கு தேரை வடம் பிடித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

சீன ஓப்பன் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் ஆயுஷ்ஷெட்டி முன்னேறியுள்ளார்

இன்று நடைபெற்ற முதல்சுற்றில் இந்தோனேஷியாவின் **Farhan -**னை 21-17, 5-21, 21-17 என்ற செட்களில் வென்றார்.

மகளிர் ஒற்றையர் முதல்சுற்றில் பி.வி. சிந்து – உன்னதிஹுடாவை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖